# ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாடு.

## சோழவந்தான் கூட்டம்.

### ஒரு பாஷை பேசும் நாடு உலகத்திலுண்டா?

### ஹிந்தியின் யோக்கியதை என்ன? நூலுண்டா? எழுத்துண்டா?

### ஹிந்தி தமிழர்க்கு விஷமே

**எப்படியும் அதை ஒழித்தே தீர வேண்டும்.**

**தமிழரை ஆரியராக்கும் அநியாயத்தையும் போக்க வேண்டும்.**

### தளவாய் முதலியார் வீரமுழக்கம்

சோழவந்தானில் 8-5-38ல் கூடிய ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாட்டில் தலைமை வகித்த திருநெல்வேலி மேடை தளவாய் குமாரசாமி முதலியாரவர்கள் எம். எல். ஸி. நிகழ்த்திய தலைமைப்பேருரை பின்வருமாறு:—

சகோதர சகோதரிகளே!

தோழர்களே!

இன்று இங்கு நாம் ஓர் நெருக்கடியான சமயத்தில் கூடியிருக்கின்றோம். தமிழ்த்தாய் வாழ்வதா, வழக்கொழிந்து மாய்வதா; தமிழர் நாகரிகம் இருப்பதா இறப்பதா; தமிழ் மக்கள் மானிடராய் மரியாதையோடு வீர மக்களாய் வாழ்க்கை நடத்துவதா அல்லது ஆரியர்களுக்கு அடிமைச் சீட்டு எழுதி அடிபணிந்து அடங்கி ஒடுங்கி வாழ்க்கை நடத்துவதா என்ற பிரச்சினைகள் நம்மைப் பொறுத்தவரை மட்டுமின்றி நம் பின் சந்ததியாரையும் பாதிக்கும்படியான முறையில் முடிவுகட்டுவதற்காகத் துடிக்கும் இருதயத்துடனும்—கொதிக்கும் இரத்தத்துடனும் கூடியிருக்கின்றோம்.

**தமிழர் சிறப்பு, நாட்டுப் பெருமை.**

கூடியிருக்கும் நீங்களோ "நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என்று வீறாப்புடன் சிவனை என்றும் சிந்தியாத "அன்று தமிழ்த்தாயைத் தோற்றுவித்தவன் ஆதி சிவனேயானாலும் அவனும் அவளை அவமதிக்க அருகதையுடையவனல்லன்" என்று நிரூபித்து, அபிப்பிராய சுதந்திரத்தை நிலைநாட்டிய வீரமூர்த்தி நக்கீரனின் நல்வழி தோன்றிய வீரர்கள்.

கூடியிருக்கும் நாடோ தமிழ்த்தாய் பிறந்து வளர்ந்து அரசாட்சி செய்த நாடு-கம்பனும் கலங்கக் கவிதை செய்யும் கண்ணியர் இருந்த நாடு.

இந்த நாட்டிலே, இந்நெருக்கடியான நிலையிலே, இவ்வீரர்கள் கூடியிருக்கும் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க நான் அருகனா என்ற பொறுப்பு என்னைச் சார்ந்ததல்ல; வரவேற்புக் கழகத்தாரையே சார்ந்தது.

நான் அருகனல்லன் என்று அறிந்திருந்தும், இப்பணியை ஏன் ஏற்றுக்கொண்டேனென்றால், ஆங்கில வாக்குப்படி "இட்ட பணியை ஆற்றலே தமிழன் கடமை, இப்பணி எதற்கு, யாருக்கு என்று வினவும் சமயம் இதுவன்று" என்ற நான் கருதுவதனாலேயே. ஆகையால் அவைபடக்கம் சொல்லி உங்கள் அவகாசத்தைப் போக்க நான் விரும்பவில்லை.

இங்கே கூடியிருக்கும் பெரியோர்களுக்கு, ஹிந்தி பிரச்சினையைப்பற்றி நான் விளக்கிக் கூறவேண்டிய அவசியமில்லை. கூறப்புகுவது 'கொல்லன் தெருவில் ஊசி விற்கும்' கதையாகும்.

இன்று ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் பெருங் கிளர்ச்சியினாலும், அவர் சகாக்களின் சதா உழைப்பாலும், சோமசுந்தரப் பாரதியாரின் சொல் வன்மையாலும், ஈழத்துச் சிவானந்த அடிகளின் ஈடற்ற உழைப்பாலும், கவிபுல்லா போன்றாரின் கவர்ச்சி உரைகளாலும், மூலை முடுக்குகளிலிருக்கும் தமிழ் மக்கள் கூட இந்த ஹிந்திப் புரட்டை நன்கறிந்து கொண்டார்கள்.

**பொதுபாஷை ஒரு பித்தலாட்டம்.**

இந்தியாவிற்குப் பொது பாஷை வேண்டுமென்பது ஓர் பித்தலாட்டம் என்று அறியாதார் யார்? இன்று நாகரீக உலகத்திலே ஒரே பாஷையுடைய நாடு ஒன்றில்லை என்பது யாவராலும் மறைக்க முடியாத உண்மை.

இக்கலியுகத்திலே சுதந்திரம் என்ற பதத்திற்கே சான்றாய் நிற்கும் நாடு ரஷ்யா. நம்முடைய மாஜி ராஷ்டிரபதி ஜவகரும் கனாக்காணும் நாடு ரஷ்யா. அத்தேசத்திலேயே பதினெட்டுப் பாஷைகளிருக்கின்றன.

அங்கு மானிட வாழ்வில் எப்பகுதிகளையெல்லாமோர் சட்ட மூலமாய்த் திட்டம் செய்கிறார்கள். ஆனால் பாஷை ஒன்றுதான் வேண்டுமென்று சொல்லும் பேதைமையை இன்றும் காணோம்.

அதுதான் பெரிய நாடு என்றால், மதுரை ஜில்லாவைவிடக் கொஞ்சம் பெரியதாகிய சுவிட்ஸர் லாண்டை (Switzer-land) எடுத்துக் கொள்வோம். வெகு காலமாய்த் தனிப்பட்ட சுயராஜ்யம் அடைந்த நாடு—ஐரோப்பாவே யுத்த வெறிகொண்டு தலைகீழாய்ப் புரண்ட அந்நாளிலும் தனித்து நின்று சுதந்திரத்தைக் காப்பாற்றிய நாடு—சர்வதேச சங்கத்தின் இருப்பிடம்—ஆஸ்திரியாவை, அபிசீனியாவை 'அபேஸ்' செய்யும் நாடுகளாலும் மதிக்கப்பட்ட நாடு.

அந்நாட்டிலே 1938 வரை மூன்று பாஷைகள் [இத்தாலி, ஜெர்மனி, பிரெஞ்சு] சர்க்கார் பாஷைகளாய் வழங்கப்பட்டு வந்தன. அதுவுங் காணாதென்று ஓர் சிறிய வகுப்பாரால் வழங்கப்படும் பிற்போக்கான பாஷையும் இவ்வருஷ முதல் நான்காவது பொது பாஷையாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

அவ்வொரு தேசத்திற்கு நான்கு பாஷைகளிருக்கலாமென்றால் அதனால் சுதந்தரம் நிலவுவதற்குத் தடையில்லையானால், குறைந்தது பத்து மடங்கு கொண்ட நமது சென்னை ராஜதானிக்கு எத்தனை பாஷைகளிருக்கலாமென்று நீங்களே கணக்கிட்டுப் பாருங்கள்.

அதற்கும் மேற்பட்ட ஒரு கண்டமாகிய நமது தாய் நாட்டிற்கு இன்னும் எத்தனை பாஷைகளிருக்கலாம் என்பதையுங் கணக்கிட்டு நமது ராஜாஜிக்குச் சமர்ப்பியுங்கள்.

**ஒரு பாஷை பேசும் நாடு உலகத்திலுண்டா?**

ஒருவேளை "நவீன நாகரீக நாடுகளில்தான் பல பாஷைகளிருக்கலாம்; நாங்கள் வேண்டுவதோ புராதன முறை" "நல் நாகரீக காலத்திற்கே திரும்புங்கள்" என்பதே எங்கள் பல்லவி "கார் எறினாலும் கோவணமே கட்டுவோம். ஆகையால் இந்நாடுகளின் பழக்கங்களைக் கவனியோம்" என்றால், நீங்கள் நம்பும் எந்தப் புராதன காலத்தில், எந்நாட்டில், எப்பொழுது ஒரே தேசிய பாஷை இருந்ததென்று கேளுங்கள்.

உலகம் போற்றும் எகிப்திய நாகரீக அரசாட்சியிலா, கிரேக்கர் காலத்திலா, உலகத்தையே ஒரு குடைக்கீழாண்ட ரோமர் ஏகாதிபத்தியத்திலா, அல்லது உங்கள் வேதகாலத்திலா எப்போது இருந்தது என்று கேளுங்கள்.

உங்கள் வேதத்திலேயே உங்கள் வேத பாஷையைப் படிக்கும் உரிமை ஒரு சாரார்க்கு மட்டும் உண்டு என்றும் ஏனையோர் படிக்கலாகாதென்றும் வேற்றுமைப்படுத்தி வைத்திருக்கின்றீர்களே! அப்படியிருக்க எந்நாளுமில்லாத விநோதம் எதற்கென்று ஒவ்வொரு தமிழ் மகனும் கேட்கின்றான்.

ஆனால், ராஜாஜியின் ராட்சத ஆட்சி முறைக்கு ஒரு பாஷை வேண்டுமானால் இந்திக்கு இருக்கும் யோக்கியதை என்ன? ஹிந்தி ஒரு பாஷை அன்று-குறைந்தது. பதினொரு பிரிவுகள் உள்ளன.

இந்தியாவிலேயே ஒரு சிறு பகுதியார்தான் பேசுகிறார்கள் என்று தமிழ் வேதியரான வேதாச்சலம் அவர்கள் விரித்துரைத்து விட்டார்களே!

ஆரியர்களே அதற்கென்ன சொல்லுகின்றீர்கள்? வேலையில்லாத் தமிழர்கள் வடநாட்டில் வேலை சம்பாதிக்கலாமென்ற வேடிக்கைப் பேச்சை, கிருஷ்ணன் நாயர் அவர்கள் கிழித்தெறிந்து விட்டார்களே!

**ஒருவர் சமஷ்டிக்குப் போக நாடு முழுமைக்கும் தண்டனையா?**

சமஷ்டிக்குவேண்டுமே என்று சமாதானம் சொன்னால் சொல்லறியாச் சொக்கர்களும் சிரிப்பார்களே! ஏனெனில் இன்று மதுரை ஜில்லாவில் எத்தனை ஆயிரம் மாணவர்கள் முதல் பாரத்தில் படிக்கிறார்களென்று கணக்கெடுங்கள். இத்தனை ஆயிரம் மாணவர்களுள் பிற்காலத்தில் 5 அல்லது 7 வருஷத்துக்கொருமுறைதானே சமஷ்டிக்கு ஒருவர் போகவேண்டும்.

இதற்காக இவ்வளவு கஷ்டத்தை இத்தனை ஆயிரம் இளம் மாணவர்கள் தலையில் சுமத்தினால் அது பித்தர் செய்யும் வேலையா, புத்தியுள்ள மகான்கள் செய்யும் வேலையா என்று யாராவது கேட்டால் நாம் என்ன சொல்ல முடியும்.

இப்பயித்தம் தெளிய மருந்து உங்கள் கையில்தானிருக்கிறது. மற்றும் ஓர் போலிக் காரணந்தான் பாக்கி. அதுதான் விந்தையிலும் விந்தை. "ஹிந்தி படித்தால் துளசிதாஸ் ராமாயணம் கற்கலாம்" என்று கதறுகிறார் கண்ணன் காட்டிய வழி கண்டறிந்து கலியுகத்தாருக்குக் காட்டும் கருணாநிதி கோபாலச்சாரியாரவர்கள்.

"துளசிதாஸ் ராமாயணம் போற்றும் பெரியாரே! தாங்கள் கம்பராமாயணம் கேட்டதில்லையே?" என்று கதறுகின்றானே தமிழ்ச் சிறுவனும்.

**ராஜாஜிக்கு ஒரு கேள்வி.**

ராஜாஜி அவர்களை நான் ஒன்று தாழ்மையாகக் கேட்க விரும்புகின்றேன். ஓர் உயர்ந்த நூல் ஒரு மொழியிலிருக்குமானால் துளசிதாஸ் ராமாயணம் உயர்ந்த நூல்தானா என்ற கேள்வி வேண்டாம்—அம்மொழியை யாவரையும் படிக்கும்படி கட்டாயப்படுத்த வேண்டுவது தங்களைப் போன்ற பிரதம மந்திரியின் பிரதம கடமையென்று தாங்கள் அந்தரங்க சுத்தியாய் நம்புவீர்களானால், ஏன் தமிழை வடநாட்டில் கட்டாய பாடமாக்க முயற்சிக்கவில்லை?

திருக்குறள் ஒன்று போதாதா? மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரிகளையும் வியப்புடையச் செய்யும் நூல்— சர்வசமயங்களும் ஒப்புக் கொள்ளும் நூல்— சர்வ தேசங்களும் போற்றும் நூல், அந்நூலை, அந்நூலில் பொதிந்து [illegible] உண்மை கண் [illegible] அறிவதற்காகத் தமிழைக் கட்டாய பாட [illegible] உங்களே [illegible] நீங்கள் பாரதத் தாயின் மக்களாகிய வடநாட்டு இந்தியர்களுக்காவது தமிழைக் கட்டாய பாடமாக்கவேண்டியது உங்கள் கடமையல்லவா?

அதற்காக என்ன செய்திருக்கின்றீர்கள்? "இந்தியைத் தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக்குவேன்" என்று வாக்குறுதி கொடுத்த அந்தப் பெரியார்களிடம் மறு வாக்குறுதி வாங்கினீர்களா? இல்லாவிட்டால் "நான் தமிழனே" என்றும் தமிழே என் தாய்மொழி என்றும் சொல்லும் நீங்கள் உங்கள் தமிழில் குறளை ஒப்புக்கொள்ளவில்லையா?

அல்லது தாங்கள் பெற்ற இன்பம் வையகம் பெறுவதில் பொறாமையா? ஒரு துளசிதாஸின் நூலுக்காக இந்தி கட்டாய பாடமாக வேண்டுமானால் திருவள்ளுவர், கம்பர், மாணிக்கவாசகர், இளங்கோவடிகள் இன்னும் அரிய பெரிய ஆசிரியர்களைப் படைத்த தமிழை எத்தனை முறை—எத்தனை நாட்டில் கட்டாய பாடமாக்க வேண்டும்?

**ஹிந்தியில் நல்ல நூலுண்டா?**

அதுதான் போகட்டும், இந்தியைப் படித்தால் எந்த நூலைப் படிப்பது? திருப்பித் திருப்பி

தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க

## ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாடு.

(1-ம் பக்க தொடர்ச்சி)

துளசிதாஸ் ராமாயணம் படித்தால் போதுமா? வேறு நூல்கள் இந்தியில் இல்லையென்று இந்தி இயக்கத்தாரே ஒப்புக் கொள்கின்றார்களே!

இனிமேல் உற்பத்தி செய்யப் போகின்றார்களாம். இதுவென்ன கதர் உற்பத்தி போன்றதா? அகில இந்திய சர்க்கா சங்கத் தலைவராயிருந்து, கதர் உற்பத்தி செய்தது போல் ராஜாஜி அவர்கள் இந்தி நூலையும் உற்பத்தி செய்யலாமென்ற பிரேமையா! எங்காவது எந்நாட்டிலாவது, எப்பாஷையிலாவது, எப்போதாவது, உத்திரவுப்படி நூல்கள் இயற்றப்பட்டதுண்டா? "பலதலைமுறைக்கொரு முறை ஒருகவி; ஒரு கவி ஆயுளில் ஒரு கவிதை தான்" என்பது உலக சரித்திரம் படிப்பித்த உண்மையன்றோ!

அதற்கு மாறாக இந்தியில் மாத்திரம் நூல்கள் வந்துவிடுமா? அம்மாதிரி நூல்கள் இயற்ற இயலுமானால், பாண்டிய, சேர, சோழ அரசாட்சியில், புலவர்களுக்கு அள்ளி அள்ளி பரிசில் வழங்கிய அந்நாளில் இயற்றப்பட்டிருக்க வேண்டிய நூல்களைக் கணக்கிட முடியுமா?

இம்மாதிரியாக இந்தி இயக்கத்தார்களால் சொல்லப்படும் காரணங்களெல்லாம் பலைக்கொவ்வாத காரணங்களாயிருக்கின்றன. ஆகையால் நாம் இந்தி இயக்கத்தை இருந்தவிடம் தெரியாமற்பண்ண முன் வரவேண்டும்.

### ஆச்சாரியார் இறக்கம்.

பாரதப் போரைப்போல துவக்கப்பட்டபோர், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபாய்-பயல் புதைப் போராய் (Gurilla Warefare) விட்டது.

இந்தி இடும்பு இயலாதென்று தெரிந்தபின், மாகாணக் கட்டாயக் கல்வி, மாய்ந்தோய்ந்து ஜில்லாவிற்கு நாலு பள்ளிக்கூடப் பரீட்சைப் படிப்பாய்விட்டது. ஆனால் இவர்கள் வஞ்சகத்தில் மயங்கி நாம் ஓய்வெடுத்து விடலாகாது. முழு வெற்றியடையும் வரை அயராது போர் நடத்த வேண்டும்.

தோழர்களே! மற்றொன்று சொல்ல விரும்புகின்றேன். நான் கருதுவது என்னவென்றால் இந்தி இயக்கம் செத்தால் போதாது, இந்தியைக் கட்டாய பாடமாக்க நினைத்த மனப்பான்மை சாகவேண்டும்.

இந்தி கட்டாயக் கல்வியை விட அதற்கு இடம் கொடுத்த மனப்பான்மைதான் மிகவும் கொடிது. அதுதான் அநேக நூற்றாண்டுகளாய்த் தமிழ் மக்களை அநேக வழிகளில் வஞ்சித்து அடிமையாக்கிக்கொண்டிருந்தது.

இன்று இந்தி ரூபமாய் வெளி வந்திருக்கின்றது. இந்த மனப்பான்மைதான் வெங்கிட்டராம சாஸ்திரியார் சொல்லியவாறு 'அரசியல் கிறுக்குத்தனம்'—'அரசியல் கொடுங் கோன்மை'—'அரசியல் ராட்சச தத்துவம்' இப்போது அரசாட்சி புரியும் வகுப்பினரின் முன்னோர்கள் மனுநூல் எழுதி அவர்களுக்கோர் மோக்ஷ நம்மவர்களுக்கோர் மார்க்கமும் காட்டினர்.

குளுக்கப்பட்டர் பட்டம் பெற்ற ராஜாஜி அவர்கள் இந்திப் பிரச்சினையின் மூலமாய் அவர்களுக்கோர ஜனநாயக முறை நம்மவர்க்கோர் ஜனநாயகமுறை கற்பிக்கின்றனர்.

இந்த இந்திப் பிரச்சினையில், ஜனநாயக முறையே கைவிடப்பட்டு, எதேச்சாதிகாரம் தாண்டவமாடுகின்றது. ஜனநாயக முறையில் நம்புகின்றவர்களானால், அவர்கள் சென்ற வருஷம் தேர்தலுக்கு முன்னல்லவோ, இந்தியைப்பற்றி பொது ஜனங்களிடம் சொல்லியிருக்க வேண்டும்.

### தேர்தலுக்குமுன் ஹிந்தியை மறந்ததேன்?

"கங்கையை வரவழைப்பதாய்ச் சொன்னார்கள்" 'கல்லில் நயிறு திரிப்பதாய்ச் சொன்னார்கள்' இன்னும் ஏதேதோ சொன்னார்கள். ஆனால் இந்தியைப் பற்றி ஏன் சொல்லவில்லை?

சொன்னால் மஞ்சள் பெட்டியைத் தமிழர்கள் மதிமயங்கி நிரப்பமாட்டார்கள் என்ற பயமா? அல்லது இந்தியையே தேர்தல் கொந்தளிப்பில் மறந்து விட்டார்களா? அல்லது இந்தியாவிற்கு பொது பாஷை என்பது மற்ற பிரச்சினைகளுடன் இடம் பெற யோக்கியதை உள்ளதல்ல என்று ஒப்புக்கொள்கிறார்களா?

ஒருவேளை பொதுத் தொகுதிகளெல்லாம் "அறிவிலிகள்" நிறைந்தவை என்று அறிவுக்களஞ்சியமாகிய அவ்வண்ணல் எண்ணி, மஞ்சள் பெட்டியில் மயங்கும் மதியீனர்களுக்கு இந்தியின் பெருமை தெரியாதென்றும் எண்ணியிருந்தால் அவரைப் போன்ற அறிவுக்களஞ்சியங்களடங்கிய, சில வருட அனுபோகமுள்ள பட்டதாரி ஓட்டர்களைக் கொண்ட, சர்வகலாசாலை தொகுதியிலாவது இதைப் பிரஸ்தாபித்திருக்கக்கூடாதா?

பாசிஸ்ட் சர்வாதிகாரம் நடக்கும் நாடுகளிலும் ஒரு போலி மக்கள் அபிப்பிராய அறிவிப்பு (Refrendum) நடத்துகின்றார்கள். அதுவுமில்லாமல் காங்கிரஸ் மந்திரிகளுக்கு எஜமானர்களாய் கருதப்படும் காங்கரஸ் காரியக் கமிட்டியிடமாவது ஏன் உத்தரவு பெறவில்லை.

### ஹரிபுரா காங்கரசில் ஹிந்தியைப் பற்றி பேசாததேன்?

காங்கரஸ் மகாநாடே இந்தியாவின் ஜன நாயகச் சங்கமென்று சொல்லுமிவர்கள், ஹரிபுரா காங்கரசில் ஏன் அத்திட்டத்தைக் கொண்டுவரவில்லை?

யார் எப்படிப் போனாலும் வங்காளிகள் எதிர்ப்பார்கள் என்ற பயந்தானே!! அதிலும் இவ்வருடத் தலைவர் ஓர் வங்காளி. போதாக் குறைக்கு இந்தியே தாய் பாஷையாகக் கொண்ட மாஜிராஷ்டிரபதி ஜவஹரும் அதைக் கட்டாய பாடமாக்கலாகாதென்று சொல்லி விட்டார். இவைகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு பிடிவாதமாய்ப் பிடிக்கும் சூழ்ச்சிதான் விளங்கவில்லை.

எல்லாவற்றிலும் மிக ருசிகரமானதென்னவென்றால், நமது பிரதம மந்திரியே பொக்கிஷ மந்திரியுமாவர். பொக்கிஷத்தில் பணமில்லையென்று ஒரு கோடி ரூபாய் கடன் வாங்கினார். அதுவும் காணாதென்று நடுத்தரப் பள்ளிக்கூடங்களையும் உயர்தரப் பள்ளிக்கூடங்களையும் மூடவும் உத்தரவிட்டார்

அதுவும் போதாதென்று தனது கூட்டாளி மந்திரி ராஜன் அய்யங்காரை ஆஸ்பத்திரியும் அடைக்கும்படி ஏவினார். இப்பண நெருக்கடியில் இந்த இந்திக்காக ஆயிரக் கணக்கான ரூபாய் செலவழிக்கும் சூழ்ச்சி என்ன?

ஆகையால் தோழர்களே, எக்காரணமும் காட்டப்படாத, எல்லாத் தலைவர்களாலும் கண்டிக்கப்பட்ட, தமிழ்மக்களால் வெறுக்கப் பட்ட, ஆரிய சூழ்ச்சியாய் அவதரித்திருக்கும் இந்த இந்தியின் இறுதி காணும் வரை, சுத்தத் தமிழ் ரத்தம் ஓடும் நவ்வொருவரும் தங்களாலியன்ற முயற்சி செய்தே தீரவேண்டும்

முயற்சி வெற்றியே தரும் என்பதற்கு ஐயமில்லை தேசாபிமானம் என்ற பெயரால் தாய் மொழிக்கு பாஷாணமாய் வந்த கட்டாய இந்தியைக் கட்டாயமாய்ப் பாடை யேற்றியே தீருவோம்.

அதுதான் முடிவு என்பது நமக்கு மட்டு மன்று நம் எதிரிகளுக்கும் நன்கு தெரியும். ஆதலால் ஹிந்தி கட்டாயக்கல்வியை நிறுத்தி விட்டால் மட்டும் போதுமென்று தாங்கள் எண்ணி விடக் கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

### ஹிந்தியை மட்டும் ஒழித்தால் போதாது

நான் முன் சொல்லியவாறு ஹிந்தியைவிட இந்தியை நுழைப்பதற்குக் கையாண்ட முறைகளுக்குப் பின்னிற்கும் மனப்பான்மை, அநேக மடங்கு அபாய கரமாயுள்ளது. இந்த ஆரிய ஆட்சியை நிலை நாட்டுவதற்கு எடுத்தவழிகளில். ஒன்றுதான் இதை விட்டால் மற்றொன்று துவக்கலாம்.

தமிழர்களை 'அறிவிலிகள்' என்ற அகம்பாவ-ஜனநாயகத் தத்துவத்தை அடியோடுஅழித்த அரக்கர் முறை-பொது ஜனங்களைப் பொருட்படுத்தாத-புல்லறிவு-பாமரரை ஏய்க்கும் பஞ்ச தந்திரங்கள்-இவைகள் எல்லாம் நம் எதிரிகளை விட்டு அகலும் வரை போராடவேண்டும் என்றும், ஆரிய அரசாட்சி அடியோடு ஒழியும் வரை அயராதீர்கள் என்றும் உங்களைக் கேட்டுக்கொண்டு என் பிரசங்கத்தை முடிக்கின்றேன்.

---

# ஜெர்மன் ப...
# பணிய ...

## செகோஸ்லோ...
## சிப...

### பிரிட்டிஷ், பிரஞ்சு...

### பிரேக் ஸ்தானீகர்...

பாரிஸ், மே 6.

பிரிட்டிஷ் சர்க்காரும், பிரஞ்சு சர்க்காரும் தங்கள் கருத்துக்களை அதிசீக்கிரத்தில் செக்கோஸ்லோவேகியா சர்க்காருக்குத் தெரிவிப்பரென்றும் அவை இன்றோ அல்லது நாளையோ தெரிவிக்கப்படலாமென்றும் இங்கு விஷயமறிந்தவர்கள் நம்புகின்றனர்.

இவ்விஷயமாக பிரிட்டிஷ்-பிரஞ்சு சர்க்கார் சென்ற சில தின

---

## பருவதராஜ குலத்தவர்களுக்கு ஒரு செய்தி

பருவதராஜகுல தோழர்களே!

நாம் மனித உலகத்தில் பிற்போக்கான நிலையில் இருக்கின்றோம். ஆதலால், நாமும் மனிதர்கள் தான் என்று மற்ற வகுப்பினர்களுக்கு நீங்கள் தெரிவிக்க முயலவேண்டும். அவ்விதம் தெரிவிக்க மகாநாடுகள் தான் மிக அவசியம். நம்மவர்களுக்குச் சுயமரியாதை என்பதே கிடையாது. இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நம் குலத்தவர்கள் தூங்கிக்கொண்டுதான் இருக்கின்றார்கள்! என்றோ எழுச்சியுறுவது!!

நம் குலத்தவர்கள் மற்ற மானிடர்களைப்போல் சுயமரியாதை, கல்வி, ஒழுக்கம், சுகாதாரம், சங்கம், அரசியல் இவற்றில் சிறந்து விளங்க முக்கியமாக வாலிபர்கள் முயலவேண்டும். இவர்களுக்கு உற்ற துணையாயாகக் கற்ற வாலிபப் பெண்கள் இருத்தல் மிக அவசியம். இவ்வாறு சிறந்து விளங்க வேண்டுவதற்கு மகாநாடுகள் மிக முக்கியம் என்பதை யான் உங்களுக்கு மறுமுறையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதலால், சென்னையிலும் சென்னை மாகாணப் பல்வேறு இடங்களிலும் சங்கங்கள் நிறுவி ஆண்டு தோறும் மகாநாடுகள் கூட்ட வாலிபர்கள் முயற்சிக்கவேண்டும்.

ஏ! வாலிபர்களே!! உங்களைக் கூவி அழைக்கிறேன். நீங்கள் தான் நம்பரபின் குன்றா மணி